**<u>In the Court of the District Munsif, Eraniel</u>**

**Original Suit No. 71/2019** **Date:07.08.2026.**

**(DW1)- சுந்தர்ராஜ்**

<u>**7** மற்றும் **8** ஆம் பிரதிவாதிகள் தரப்பு குறுக்கு விசாரணை</u>

1. நான் முதல் விசாரணையில் குறிப்பிட்டுள்ள அ.வ.எண். 24/2017 வழக்கு எதற்காக தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் அவ்வழக்கு சொத்தை அரசாங்கம் எடுத்துக்கொண்டதற்காக தாக்கல் செய்யப்பட்ட வழக்காகும். இவ்வழக்கின் வாதி போக்குவரத்துக் இடையூறாக அரசு சொத்தை அபகரித்து வைத்துள்ளார் என்றால் சரிதான். குண்ணங்காடு - தட்டான்விளை சாலை எங்கு சென்று முடிவடைகிறது என்றால் அலகன்பாறை பண்டக சாலை வந்து முடிவடைகிறது. அரசு நிலத்தை வாதி ஆக்கிரமித்துள்ளதால் நாங்கள் மனு கொடுத்தோம் என்றால் சரிதான். மாவட்ட ஆட்சி தலைவர், பேரூராட்சிக்கு ஆக்கிரமிப்பை அகற்ற மனு கொடுத்தோம்.

2. அதன் அடிப்படையில் தான் அரசு நடவடிக்கை எடுத்தார்கள் என்றால் சரிதான். வாதி குறிப்பிட்டுள்ளது போல் அரசு அதிகாரிகள் வாதி சொத்தில் எந்த வித சேதமும் ஏற்படுத்தவில்லை என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. அரசு அதிகாரிகள் வாதி அரசு சொத்தை ஆக்கிரமித்து வைத்திருந்ததால் நாங்கள் கொடுத்த மனுவின் அடிப்படையில் நடவடிக்கை எடுத்துள்ளார்கள் என்றால் சரிதான்.

(ஒப்பம்)

**மாவட்ட உரிமையியல் நீதிபதி,**

**இரணியல்.**